தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-2-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலை நாட்டு நலப் பணித் திட்டம் சார்பில் காப்பகங்களுக்கு உதவி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நாட்டு நலப் பணித் திட்டம் சார்பில் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு அறிவித்தல், தூய்மை மற்றும் பசுமை வளாகம் மற்றும் காப்பகங்களுக்கு சென்று உதவி செய்து சமூகப் பொறுப்புடன் மனித நேயத் தொண்டு ஆற்றுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக 21.2.2015 அன்று இரண்டாம் ஆண்டு ஆற்றல் மற்றும் சுற்றுச் சூழல் மற்றும் உணவுப் பதனிடும் பொறியியல் பயிலும் மாணவ, மாணவியர் சார்பில் அலுவலகம் மற்றும் வளாகக் குடியிருப்பில் நன்கொடை ரூ.8800/- மற்றும் துணிகள் சேகரிக்கப்பட்டு காப்பகங்களுக்கு வழங்கப்பட்டது. முதலில் உதவும் கரங்கள் சார்ந்த சொந்தம் குழந்தைகள் காப்பகம், மருதமலை அடிவாரத்தில் விமல் ஜீவன் சாந்தி தொழு நோயாளிகள் நலச்சங்கத்தால் நடத்தப்படும் தொழு நோயிளிகள் காப்பகம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டது. பின்னர் ஸ்ரீ அன்பாலயம் மறுவாழ்வு இல்லம், தொண்டாமுத்தூர் சாலைக்கு சென்று மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், ஆதரவற்றவர்களுடன் கலந்துரையாடி நலம் விசாரித்தனர். பின்னர் ரத்தின சபாபதி புரம் மாநகராட்சி ஆதரவற்றோர் காப்பகத்திற்கு ரூ.5000/- மதிப்பில் வாளிகள், குவளைகள், துண்டுகள், பினாயில், சேவ்லான் கிருமிநாசினி, துவைக்க சோப் மற்றும் பவுடர், குளிக்க பயன்படும் சோப் ஆகியவை அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அளிக்கப்பட்டது.

காப்பக பராமரிப்பாளர் திரு. கங்காதரன் நாட்டு நலப் பணித் திட்ட மாணவியர்களின் மனித நேய உணர்வையும், அனுமதி அளித்த பல்கலை அலுவலக நிர்வாகிகளையும் வாழ்த்தினார். இவ்வாறு தொண்டு செய்யும் போது கோபம், பொறாமை, பழிவாங்கும் நோக்கு போன்ற எதிர்மறை எண்ணங்கள் விலகி இறைவன் நமக்கு அனைத்து நன்மைகளையும்

கொடுத்துள்ளார் என்று நன்றி பாராட்டும் எண்ணம் மேலோங்கும் என்றார். மேலும் பெற்றோர்களை பேண வேண்டும் என்ற சிந்தனை உருவாகும் என்றார். தொடர்ந்து இது போன்ற நற்செயலகளில் மாணவியர் ஈடுபட வேண்டும் என்று அறிவுறுத்திய அவர், வருங்கால சந்ததிகள் அப்போது தான் நல்லெண்ணத்துடன் திகழ்ந்து மகாத்மாக்களாக இருப்பர் என்றார். மாணவிகள் பூஜா, சிவானி, ரம்யா, ராஜேஸ்வரி, சௌந்தர்யா, நவீனா ஆகியோர் தங்களின் செயல் மனநிறைவு தந்ததாக கூறினர். இறைவன் அளித்த கொடையாம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்க இப்பணி உதவும் என்றனர். நிகழ்ச்சிக்கு நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர். மு.ரா. லதா ஏற்பாடு செய்து பங்கு பெற்றார்.

மக்கள் தொடர்பு அலுவலர்